உயிர் காக்கும் மருந்துகளுக்கு ஜி.எஸ்.டி. வரியைக் குறைக்க வேண்டும்!

ஜி.எஸ்.டி. என்ற பெயரில் வரி பயங்கர வாதத்தை அமல்படுத்துவதா?

மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி கண்டனம்!

புதுடெல்லி, ஏப். 1-

"ஜி.எஸ்.டி. என்ற பெயரில் வரி பயங்கரவாதத்தை அமல்படுத்துவதா?" என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கண்டனம் தெரிவித்தார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள் பாராளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கை குறித்து நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:-

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து விவாதத்தில் பங்கேற்று வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தில் என் கருத்துக்களை தெரிவிப்பதற்கு முன் இந்த நிதிநிலை அறிக்கை பயன்படுத்தி, டெல்லி மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றிப் பெற்றதற்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆம் தனிநபர் வருமான வரியில் சலுகை வழங்கி அதாவது ரூபாய் 12 லட்சம் வரை உள்ள வருமானத்துக்கு வரி இல்லை என அறிவித்து டெல்லி மாநில வாக்காளர்களைக் கவர்ந்து, நீங்கள் பெற்ற வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்.

இந்த விவாதத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர் தமிழ்நாட்டை சேர்ந்த உறுப்பினராகிய நான் குறிப்பிட்ட விரும்புவது யாதெனில் நீங்கள் புள்ளி விவரங்களை பாருங்கள் எங்கள் தமிழ்நாடு ஒரு ரூபாய் வரி செலுத்தினால் ஒன்றிய அரசு மீண்டும் தமிழகத்துக்கு 29 பைசா அல்லது 30 பைசா வைத்தான் தருகிறது கடந்த 10 வருடங்களில் தமிழ்நாடு சுமார் ரூபாய் 8 லட்சம் கோடி வரியாக ஒன்றிய அரசுக்கு வழங்கி உள்ளது. ஆனால், தமிழகத்தின் வளர்ச்சிக்கு என்று அந்த நிதியிலிருந்து 2.4 லட்சம் கோடியை மட்டுமே ஒன்றிய அரசு எங்கள் தமிழகத்துக்கு வழங்கியுள்ளது நான் ஒத்துக் கொள்கிறேன், இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு வழங்கி அவர்கள் முன்னேற்றுவதற்கு உதவ வேண்டும் என்பது நியாயம்தான் ஆனால் நான் தமிழக அரசு செலுத்தி செலுத்திய ரூபாய் 5.6 கோடி அதாவது எங்கள் வரியை நீங்கள் எங்களுக்கு திருப்பி தந்த ரூபாய் 2.4 லட்சம் கோடி நீங்களாக மீதமுள்ள ரூபாய் 5.6 லட்சம் கோடி நிதியை உத்திர பிரதேசத்துக்கும் பீகாருக்கும் மற்றுமுள்ள முன்னேற்றம் அடையாத மாநிலங்களுக்கு வரி வழங்கியுள்ளார்கள்.

ஆனாலும் இதனால் நாம் பெற்ற பயன் என்ன இந்த மாநிலங்களில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதா? நீங்கள் தென் மாநிலங்களை பாருங்கள் அங்கேல்லாம வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 0.5 % முதல் சதவீதத்துக்கு கீழ் தான் இருக்கின்றது ஏனெனில் தென் மாநிலங்களில் மக்களின் மக்களின் வறுமையை ஒழிப்பதற்காக மாநில அரசுகள் திட்டம் தீட்டி செயல்படுத்தி வருகின்றன இன்னமும் வட மாநிலங்களில் பீகாரில் 20 சதவீதம் மக்கள் வறுமையில் வாடுகின்றனர் நமது பிரதமரின் சொந்த மாநிலத்திலேயே குஜராத்திலேயே 10% மக்கள் வறுமையில் வாடுகின்றனர். உங்கள் அரசு நடைபெறும் உத்தரப்பிரதேசத்தில் சுமார் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் மக்கள் வறுமையில் வாழ்கின்றனர் உங்களால் உங்கள் மக்களை வறுமையிருந்து மீட்க முடியவில்லை அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை முறையை அமைத்துத்தர முடியவில்லை.

முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துகிறார்!

நீங்கள் எங்கள் தமிழ்நாட்டைப் பாருங்கள் 1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி பிடித்த நாளிலிருந்து கடந்த 50 வருடங்களாக தமிழ்நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக, எங்கள் மாநில அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றது வறுமையை ஒழிப்போம் என்பது எங்கள் கொள்கை என முழங்கி செயலாற்றி வருகிறோம் எங்கள் தமிழக முதல்வர் டாக்டர் மு.க ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்றார் உயரிய கொள்கையை உள்ளத்தில் ஏந்தி உழைத்து வருகிறார், பின் தங்கியுள்ள நிலையில் உள்ள மக்களின் நல்லத்துக்காக பல மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார் மக்களின் வருவாயை அதிகரிக்க வேண்டும் என்று செயல்பட்டுக் கொண்டு வருகிறார்

ஆண்டுக்கு ரூபாய் 27000 வருவாய் உள்ளவர்களை வறுமை கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் என்று வகைப்படுத்தியுள்ளது நமது அரசு அப்படி வாழ்பவர்களின் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வருவாய் உள்ளவர்களாக மற்ற வேண்டும் என்று பல நலத்திட்டங்களை எங்கள் முதல்வர் செயல்படுத்திக் கொண்டுருக்கின்றார் தமிழகத்தில் குடும்பப் பெண்களின் உரிமை தொகையாக மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கி பெண்களின் முன்னேற்ற த்திற்கு வழி செய்துள்ளார் தமிழ்நாட்டில் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக கல்லூரியில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கி வருகிறார். இதனால் கல்லூரிகளில் பட்டப்படிப்பு படிப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

இந்தியாவில் கல்லூரியில் படித்து பட்டம் பெறுபவர்களின் எண்ணிக்கை தற்போது 25 % ஆக உள்ளது இதனை 2030 ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதமாக உயர்த்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் கல்லூரிகளில் பட்டப்படிப்பு படிப்பவர்களின் எண்ணிக்கை இப்போது 52 சதவீதமாக உயர்ந்து உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் இதிலிருந்து. கல்விக்கு எங்கள் தலைவர்கள் எவ்வளவு முக்கியத்து வம் தருகின்றார் என்பது உங்களுக்குப் புரியும். எங்கள் திராவிட மாடல அரசு பெண்களின் முன்னே ற்றத்திற்கு செய்து வரும் திட்டப்பணிகளை பாருங்கள்.

தமிழ்நாட்டு மக்கள் மீது கருணை இல்லை!

அடுத்தது நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன் இந்தியாவில் ஒட்டுமொத்த முன்னே ற்றத்திற்காக தமிழ்நாட்டில் இருந்து வரி மூலமாக லட்சக்கணக்கான கோடி ரூபாய்களை நாங்கள் வழங்குகிறோம் ஆனால் எங்களுக்கு எங்கள் மாநிலத்தில் சமீப காலத்தில் இரண்டு இருக்கைச் சீரழிவுகள் ஏற்பட்டன. எங்கள் அரசு ஒன்றிய அரசின் இயற்கை பேரிடர் நிதியிலிருந்து எங்கள் மாநிலத்திற்கு ரூபாய் 40 ஆயிரம் கோடி வழங்க வேண்டும் என்று கூறியது பலமுறை ஒன்றிய அரசுக்கு கோரிக்கை கடிதங்கள் அனுப்பியும் ரூபாய் 200 கோடி மட்டும்தான் ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 5.6 லட்சம் கோடியை இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களின் வளர்ச்சிக்காக வழங்கியுள்ள மக்கள், இயற்கை பேரிடரால் பெரும் துன்பத்துக்கு ஆளான போது இந்த அரசு தமிழ் மக்களுக்கு உதவி புரிய முன் வரவில்லை. தமிழ் மக்களின் மீது உங்களுக்குத் சிறிது கூட கருணை இல்லாமல் எங்கள் கோரிக்கையை நிராகரித்து விட்டீர்கள்.

மும்மொழிக் கொள்கையைத் திணிப்பதா?

அடுத்ததாக தேசிய கல்விக் கொள்கை என்று ஒன்றிய அரசு அறிவித்துவிட்டு தமிழகம் பல ஆண்டுகளாக பின்பற்றி வரும் இரு மொழிக் கொள்கை திட்டத்திற்கு எதிராக ஒரு திட்டத்தை அறிவித்து விட்டு தமிழ்நாட்டின் மும்மொழிக். கொள்கையாக திணிக்க பார்க்கிறீர்கள். எங்கள் அரசு பள்ளிகளில் இந்தியைத் திணிக்கப் பார்க்கிறீர்கள். இதற்கு எங்கள் அரசு ஒப்புதல் தெரிவிக்கவில்லை என்பதற்காக தமிழகத்துக்கு கல்விக்கு என ஒதுக்கீடு செய்ய வேண்டிய ரூபாய் 2142 கோடியை தராமல் இருக்கின்றீர்கள், ஆனாலும் உங்களுக்குப் பணிந்து எங்கள் திராவிட மாடல் அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்காது, கடந்த 24.03.25 அன்று எங்கள் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு ரூபாய் 10,000 கோடி கொடுத்தால் கூட நாங்கள் இந்தி மொழியை ஏற்க மாட்டோம் என்று தமிழக சட்டப்பேரவையில் முழங்கி உள்ளார்.

இந்த சமயத்தில் உங்களை நோக்கி நான் ஒரு கேள்வி கேட்கின்றேன். நீங்கள் வட மாநிலங்களில் மும்மொழிக் கொள்கையைப் பின்பற்றுகின்றீர்களா ? அப்படி என்றால் ஏன் பல வட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் பேச முடியவில்லை பெரும்பாலான வட இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தி மொழியைத் தவிர வேறு மொழியிலோ அல்லது ஆங்கிலத்தில்லோ பேச முடியவில்லை. அவர்களால் இந்தி மொழியைத் தவிர வேறு மொழிகளில் பேச முடியவில்லை. ஆனால் தமிழகத்தில் உள்ள நாங்கள் இரு மொழிகளைக் கற்று பேசுகிறோம் நீங்கள் கூடுதலாக இந்தி மொழியையும் படியுங்கள் என்று சொல்வது நியாயமா? குறிப்பாக மாணவர்களை வஞ்சிப்பது நியாயமா?

நாங்கள் பின்பற்றி வரும் இரு மொழி கொள்கையால் தமிழகம் மிகப் பெரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்ற போது எங்கள் மாநிலம் இந்தியாவில் வறுமை அதிகம் உள்ள மாநிலங்களில் மூன்றாவது இடத்தில் இருந்தது. ஆனால் இப்போது பாருங்கள், நாங்கள் இந்தியாவில் வருமானம் அதிகம் உள்ள மாநிலங்களில் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளோம், ஆம் தமிழகம் இந்தியா அளவில் இரண்டாவது பணக்கார மாநிலமாக திகழ்கின்றது. அதற்குக் காரணம் நாங்கள் பின்பற்றி வந்த கொள்கைதான் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

அடுத்ததாக இந்த அரசு வசூலிக்கும் ஜி.எஸ்.டி பற்றி கூற விரும்புகிறேன். இந்த அரசு ஜி.எஸ்.டி என்னும் பெயரில் வரி பயங்கர வாதத்தை நாட்டில் அமல்படுத்தி வருகின்றது என்று குற்றம் சாட்டுகின்றேன்.

உங்கள் ஜி.எஸ்.டி அதிகாரிகள் வணிக நிறுவனங்களுக்கு சென்று அவர்களை மிரட்டுகின்றனர். அவர்களிடமிருந்து வரியாகவும் வேறு வழிகளிலும் பணத்தை பறித்துச் செல்கின்றனர். இந்த வரி வசூல் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது , வணிக நிறுவனங்களை இவ்வாறு மிரட்டித் துன்புறுத்துவது பயங்கரவாதம் என்றுதான் சொல்ல முடியும். பல பொருட்களுக்கு 18 சதவீதம் ஜி எஸ் டி நிர்ணயிக்கப்ப ட்டுள்ளது மக்கள் இதனை குறைக்கும் படி கோரிக்கை செய்யும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படாமல் தூக்கி எறியப்படுகின்றன. மக்களை துன்பத்தில் வாட்டி, அரசு வரி வசூலிக்கின்றது. நான் இந்த அரசை கேட்டுக் கொள்வது யாதெனில் நீங்கள் அத்தியாவசிய பொருட்களுக்கும் உயிர் காக்கும் மருந்துகளுக்கும் விதித்துள்ள 18 சதவீதம் ஜி.எஸ்.டி வரியை கொஞ்சமாவது குறைத்துக் கொள்ளுங்கள்.

வணிக நிறுவனங்களை மிரட்டுவதா?

அடுத்ததாக மீண்டும் தேர்தல் பத்திரங்களை அமலுக்கு கொண்டு வர வேண்டும் என்று பேசப்படுகிறது. எனது சக உறுப்பினர் சுஷ்மி மதுவா அவர்கள் கூட இது குறித்து பேசி உள்ளார் மீண்டும் தேர்தல் பத்திரம் மூலம் பணம் பெறும் திட்டத்தைக் கொண்டு வர போகிறீர்கள்? உச்ச நீதி மன்றம் அதனை அரசியல் சட்டத்திற்கு புறம்பான செயல் எனக் கூறி தடை செய்த பின்னும் நமது நிதி மந்திரி இதனை மீண்டும் கொண்டு வருவது பற்றி சிந்திப்பதாக் கூறுகிறார் தேர்தல் பத்திரங்கள் மீண்டும் கொண்டு வருவதன் நோக்கமே அமலாக்கத் துறையின் (என்போரஸ் டைரக்ட்ரேட்) மூலம் மிரட்டி பணம் பறிப்பது தானே? நீங்கள் அமலாக்க துறையைப் பயன்படுத்தி ஒரு வணிக அல்லது நிதி நிறுவனத்தை மிரட்டு கின்றீர்கள். பின்னர் அவர்கள் தேர்தல் பத்திரங்கள் மூலம் பிஜேபிக்கு நிதி வழங்கி விட்டால் அமலாக்குத் துறை தனது விசாரணையை நிறுத்திக் கொள்ளும்படி செய்கின்றீர்கள்.

இப்போது நீங்கள் கொண்டு வந்துள்ள நிதி மசோதாவில் கூட வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு குடிமக்களின் அனைத்து இடங்களையும், அவர்களது சுய விபரங்களையும் சோதித்துப் பார்க்க அதிகாரம் தருவதற்கு ஏற்பாடு செய்துள்ளீர்கள். மத்திய வருவாய் பிரிவைச் சேர்ந்த குடிமக்கள் உங்கள் சட்டங்களால் துன்புறுத்தப்படு கின்றார்கள் நமது உறுப்பினர் சசி தரூர் அவர்கள் குறிப்பிடுவது போல மிக அதிக வருவாய் பிரிவை சேர்ந்த குடிமக்கள் உங்களது வரி வசூல் பயங்கரவாதத்தில் இருந்து தப்புவதற்காக வெளி நாடுகளுக்கு போய் விடுகிறார்கள். நீங்கள் இங்கேயே உள்ளவர்களை கொடுமைப்படுத்தி நமது பிரதமர் கூறும் வளர்ச்சி பெற்ற பாரதத்தை உருவாக்க போகின்றீர்களா? இந்தியாவை வல்லரசு நாடாக்கப் போகிறீர்களா?

நான் ஒரு வல்லரசு நாடு என்று சொல்லப்படும் நாட்டில் மக்களின் வருவாய் எவ்வளவு இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று தேடிப்பார்த்தேன். வல்லரசு நாடு என்று அழைக்கப்படும் நாட்டில் தனிநபர் வருமானம் சுமார் 15,000, அமெரிக்க டாலராக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நமது நாட்டில் தனிநபர் வருமானம் என்பது 2500 டாலர் கூட எட்டவில்லை. தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் 4000 டாலராக உள்ளது.

அதாவது தனிநபர் வருமானத்தை 15,000 டாலராக நாம் உயர்த்த வேண்டும் என்றால் இந்தியாவில் ஒட்டுமொத்த உற்பத்தி 22 ட்ரில்லியன் டாலராக உயர்த்த வேண்டும். தற்போது இந்தியா பொருளாதாரம் உள்ள நிலையில் நாட்டில் ஒட்டுமொத்த உற்பத்தியாக 5 ட்ரில்லியன் ஆக்குவதற்கு இந்த அரசு நீண்ட கால திட்டம் ஒன்று கொண்டு வந்துள்ளது இந்நிலையில் உங்களால் நமது ஒட்டுமொத்த உற்பத்தியை 22 ட்ரில்லியன் டாலராக உயர்த்த சாத்தியம் உள்ளதா?

வாரா கடன் வசூல் சாத்தியமா?

அடுத்ததாக வாரா கடன் தள்ளுபடி பற்றி கூற விரும்புகிறேன். இந்த அரசாங்கம் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 18 லட்சம் கோடி வராத கடனாக கூறி தள்ளுபடி செய்துள்ளது தள்ளுபடி அறிவிப்பை செய்துவிட்டு அரசு அந்த தொகையை வசூலிக்க முயற்சி செய்யும் என்று நமது அமைச்சர் கூறுகிறார். உண்மையில் இது சாத்தியமா? சாத்தியம் எனில் ஏற்கனவே வசூல் செய்து இருக்க மாட்டீர்களா?

இது ஒரு பக்கம் இருக்க நமது பிரதமர் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவோம் என வாக்குறுதி தந்தார். நான் இப்போது சொல்ல விரும்புவது என்னவெனில் நீங்கள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பு ஆக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. அவர்களது கடன்களையாவது தள்ளுபடி செய்யுங்கள் எங்கள் தமிழ்நாடு அரசு இதுபோன்று பலமுறை விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்துள்ளது என்று பெருமையுடன் கூறுகிறேன்.

கடைசியாக எனது இன்னொரு கோரிக்கையையும் கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன் 10 ஆண்டுகளுக்கு முன் நமது பிரதமர் நமது நாட்டில் ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன், ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் போடுவேன், டாலர் ரேட்டை குறைப்பேன், பெட்ரோல் விலையை குறைப்பேன், என்றெல்லாம் வாக்குறுதிகள் அள்ளி வழங்கினார் ஆனால் இவ்வாறு எதையேனும் செய்தாரா? இந்த மைனாரிட்டி அரசாங்கத்துக்கு ஆதரவு தரும் தெலுங்கு தேசிய கட்சியினரையும் ஒன்றுபட்ட ஜனதா தள கட்சியினரையும் இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

இறுதியாக பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மறு நிர்ணயம் செய்யும் போது நேர்மையாக நடந்து கொள்ளுங்கள் என்றும் மும்மொழி கொள்கை என்று சொல்லி தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சி செய்யாதீர்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி பேசினார்.

ஒன்றிய அரசின் நேர்மையற்ற நிதிப் பகிர்வுக் கொள்கை

மாநில உரிமைகளுக்கு எதிரானது!

மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஏப்.1-

"ஒன்றிய அரசின் நேர்மையற்ற நிதிப் பகிர்வுக் கொள்கை மாநில உரிமைகளுக்கு எதிரானது" என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் எம்.எம். அப்துல்லா பேசும் போது குற்றஞ்சாட்டினார்.

மாநிலங்களவையில் ஒன்றிய பட்ஜெட் கூட்டத் தொடரில் நடைபெற்ற நிதி மசோதா மீதான விவாதத்தில் எம்.எம். அப்துல்லா பேசியதாவது:-

"கூட்டாட்சி முறையை ஒற்றை ஆட்சி முறையாக்கும் முயற்சிக்கு கிளம்பி உள்ள எதிர்ப்பின் ஈட்டி முனைதான் நாங்கள்!" என்றார் பேரறிஞர் அண்ணா. இருமொழிக் கொள்கையிலிருந்து, தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான போராட்டம் வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசுக்கு நாள்தோறும் கொள்கை பாடம் நடத்திக்கொண்டுதான் இருக்கிறார். தமிழ்நாடு என்றென்றும் சமூக நீதி, கூட்டாட்சி உரிமைகள், மற்றும் 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற வகையிலான வளர்ச்சிக்கு முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது. ஆனாலும், இந்த ஒன்றிய அரசு தனது கடந்த காலத் தவறுகளிலிருந்தும் எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ள மறுக்கிறது. வெற்றிகரமான ஆட்சிமுறைகளை கடைப்பிடிப்பதற்குப் பதிலாக, தோல்வியுற்ற கொள்கைகளை திணிக்கிறது மற்றும் மாநில உரிமைகளை நசுக்குகிறது. கூட்டாட்சிக் கொள்கை என்ற ஒன்று இந்திய அரசமைப்பின் அடிப்படைச் சுவடுகளில் ஒன்றாக இருக்க, இந்த ஒன்றிய அரசு அதை முற்றிலும் மொத்தமாக அழிக்க முயல்கிறது.

இந்த ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் இந்தியாவின் வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், குறிப்பாக எல்.ஐ.சி உள்ளிட்டவை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. நிதி நிறுவனங்களை வலுப்படுத்துவதற்குப் பதிலாக பொதுமக்களிடம் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது.

இளைஞர்களுக்கு மிகப்பெரிய ஆபத்து!

இந்த ஒன்றிய அரசு "ஒரே நாடு , ஒரே தேர்தல்" மற்றும் "ஒரே நாடு, ஒரே மொழி" போன்ற ஏகாதிபத்திய கொள்கைகளை நடைமுறைப்படுத்த முயல்கிறது. இந்திய மக்கள் நம்பிக்கையுடன் கொடுத்த வரிகளை, வேலைவாய்ப்பை உருவாக்கவும், பொருளாதாரத்தை வளப்படுத்தவும் பயன்படுத்த வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக, வேலை இழப்பு, நிதி நெருக்கடி போன்றவைதான் உருவாகியுள்ளன. டிசம்பர் 2024 நிலவரப்படி, இந்தியாவின் வேலை இல்லாதவர்கள் விகிதம் 8.30% ஆக உயர்ந்துள்ளது, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வீச்சு 15% ஆக அதிகரித்துள்ளது. இது இந்திய இளைஞர்களின் எதிர்காலத்துக்கு மிகப்பெரிய ஆபத்தாகும்.

கிராமப்புற வேலைவாய்ப்புக்கு உயிர்நாடியான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதச் சட்டம் (நூறு நாள் வேலைத்திட்டம்), பற்றாக்குறையான நிதி ஒதுக்கீட்டின் காரணமாக நெருக்கடியில் உள்ளது. 2025-26 பட்ஜெட்டில் இத்திட்டத்திற்கு தேவையை விட குறைவாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது பல கிராமப்புற தொழிலாளர்களை நிதி நெருக்கடியில் தள்ளுகிறது. நூறு நாள் வேலைத்திட்ட பணியாளர்களுக்கு ஊதியங்கள் தாமதமாக வழங்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டிற்கான ஊதியத்தில் 60% க்கும் அதிகமானவை நிலுவையில் இருப்பதாக அறிக்கைகள் காட்டுகின்றன.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சுமார் 30% பங்களிக்கும், நாடு முழுவதும் 12 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நமது பொருளாதார கட்டமைப்பில் மிக முக்கியமான துறையான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூட பெரிதும் கவனிக்கப்படாமல் இருக்கிறது.

இந்த ஒன்றிய அரசின் தங்கப் பத்திரத் திட்டம் (Sovereign Gold Bond) கூட மோசமாக தோல்வியடைந்துள்ளது. 2015ல் தொடங்கிய இந்தத் திட்டம், மக்கள் நடுவே பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்க இறக்குமதியைக் குறைத்து பாதுகாப்பான முதலீட்டை வழங்குவதாக வாக்குறுதிகளுடன் 2015 இல் தொடங்கப்பட்டது, ஆனால் அது இரண்டையும் செய்யவில்லை. மக்கள் இன்னும் தங்கத்தை வாங்க விரும்புகிறார்கள். எனவே நாடு தொடர்ந்து இறக்குமதிகளுக்கு அதிக அளவில் செலவிடுகிறது.

தங்கத்தின் விலை உயர்வு!

இந்தத் திட்டம் தொடங்கியதிலிருந்து தங்கத்தின் விலை கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்பதே உண்மையான பிரச்சனை. பணத்தைச் சேமிப்பதற்குப் பதிலாக, அரசாங்கம் இப்போது முதலீட்டாளர்களுக்கு மிக அதிக விகிதங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். இது பொது நிதியில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. சாலைகள், பள்ளிகள் மற்றும் சிறு வணிகங்களுக்குச் செல்ல வேண்டிய பணம் இப்போது இந்தப் பணம் செலுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

நடுத்தர வர்க்கத்தினருக்கு, இந்தத் திட்டம் ஒரு பாதுகாப்பான முதலீடாக சந்தைப்படுத்தப்பட்டது, ஆனால் உண்மையில், இது வீட்டுச் சேமிப்பைப் பாதிப்பதாக உள்ளது. கடந்த பத்தாண்டுகளில், இந்திய குடும்பங்களின் சேமிப்பு விகிதம் 2012 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.6% ஆக இருந்து 2023 இல் வெறும் 15.1% ஆகக் குறைந்துள்ளது. ஒரு காலத்தில் நிலையான வைப்புத்தொகை மற்றும் சிறு சேமிப்புத் திட்டங்களை நம்பியிருந்த குடும்பங்கள் இப்போது அவர்களின் அன்றாட செலவுக்கே வருமானம் போதுமானதாக இல்லைஎன்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. வேலை வாய்ப்புகள் குறைந்து வருவதாலும், வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து வருவதாலும், அடிப்படைச் செலவுகளைச் சமாளிக்கவே மக்கள் கடன் வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

மோசமான வங்கிகளின் செயல்பாடு!

மோடி தலைமையிலான ஒன்றிய அரசாங்கத்தின் மற்றொரு மோசமாகத் திட்டமிடப்பட்ட கொள்கை இது, இந்தியாவின் நிதிச் சிக்கல்களை மேலும் அதிகரிக்கிறது. இந்தத் திட்டம் தோல்வியடைந்ததை நிரூபிக்கும் வகையில், அரசாங்கம் புதிய பத்திரங்களை வெளியிடுவதை நிறுத்தியுள்ளது. ஆனால் சேதத்தை சரிசெய்வதற்குப் பதிலாக, அது அமைதியாக இருக்கிறது. நம்பி முதலீடு செய்த மக்களை ஏமாற்றியுள்ளது ஒன்றிய அரசு. இந்த அரசாங்கத்தின் பொறுப்பற்ற பொருளாதாரக் கொள்கைகள் முழு நிதி அமைப்பையும் அழுத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளன. சவரன் தங்கப் பத்திரத் திட்டத்தின் தோல்வி தங்கத்தைப் பற்றியது மட்டுமல்ல; இந்த அரசாங்கம் எவ்வாறு நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையை முறையாக பலவீனப்படுத்தியுள்ளது என்பது பற்றியது.

மேலும், பொதுத்துறை வங்கிகளின் செயல்திறன் மிகவும் மோசமாக இருப்பதைப் பார்ப்பது வருத்தமளிக்கிறது. அவற்றில் பெரும்பாலானவை மிக வேகமாக சரிந்து வருகின்றன. ரூ. 5 லட்சம் வரையிலான வைப்புத்தொகைகளுக்கு மட்டுமே உத்தரவாதம் என்பது உலகிலேயே மிகக் குறைவான ஒன்றாகும். ரிசர்வ் வங்கியின் 2023 ஆம் ஆண்டு அறிக்கை, வைப்புத்தொகைகளில் 46.3% மட்டுமே பாதுகாக்கப்படுகிறது என்று கூறுகிறது. இந்த வைப்புத்தொகைகள் ரூ. 5 லட்சத்திற்கு மேல் இருப்பதால், வைப்புத் தொகையில் 54% பாதுகாக்கப்படவில்லை. வங்கிப் பணத்தை வரக்கடனாக்கி விட்டு மிகப்பெரிய அளவில் கொள்ளையடிப்பவர்கள் வெளிநாடுகளில் சுகமாக இருக்கிறார்கள், ஒன்றிய அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் வங்கிகள் ரூ. 15 லட்சம் கோடி வாரக்கடனை தள்ளுபடி செய்துள்ளன.

இது யாருடைய பணம்? 2016 முதல் 2022 வரை, ஆளும் கட்சிக்கு ஆதரவான பெருநிறுவனங்களுக்கு மட்டும் வங்கிகள் 35 லட்சம் கோடியை வழங்கியுள்ளன. 2021 ஆம் ஆண்டில் மட்டும் 14 லட்சம் கோடி வழங்கப்பட்டது. அதிர்ச்சியூட்டும் விதமாக பெரும்பாலும் மும்பை, டெல்லி மற்றும் குஜராத்திலிருந்து 18,870 தனிநபர்கள் மட்டுமே இந்த கடன்களைப் பெற்றனர். 35 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டாலும், 19 லட்சம் கோடி மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது. இதனால் 16 லட்சம் கோடியை திரும்பப் பெற முடியாது என்று இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் அறிக்கை வெளிப்படுத்துகிறது. மொத்தமுள்ள 18872 பேரில் 10,000 பேர்களின் பெயர்களை மட்டுமே வெளியிட்டுள்ளது ஒன்றிய அரசு. ஆனால் மீதமுள்ள 8,000 பேர் யார்? அவர்கள் பாஜகவுக்காக தேர்தல் பத்திரங்களை வாங்கினார்களா? சாதாரண குடிமக்கள் அன்றாட செலவுக்கே போராடும் அதே வேளையில், கடன்கள் என்ற போர்வையில் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்தவர்களை ஒன்றிய அரசாங்கம் பாதுகாக்கிறதா?

ஏகாதிபத்திய அரசியல்!

ஒன்றிய அரசு எதிர்க்கட்சியால் ஆளப்படும் மாநிலங்களை பொருளாதார ரீதியாக தளர்த்துவதற்காக அவர்களுக்கு உரிய நிதியைத் தர மறுக்கிறது. தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் வரிவிதிப்பு பங்கீடு, ஜிஎஸ்டி நஷ்ட ஈடு, மத்திய மானிய திட்ட நிதி போன்றவை தாமதமாக அல்லது குறைவாக பெறுவதால், பெரும் நிதிச் சுமையைத் தாங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. ஒன்றிய அரசின் நேர்மையற்ற நிதிப் பகிர்வு கொள்கை, நிதி வழங்குவதற்கான கடுமையான நிபந்தனைகள் ஆகியவை மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பறித்து மாநில அரசுகளின் நிர்வாகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மாநிலங்களிடையே கூட்டாட்சியை வளர்ப்பதை விட ஏகாதிபத்திய அரசியல் கட்டுப்பாட்டையே ஒன்றிய அரசு முன்னுரிமையாகக் கொண்டிருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

தேசிய வருவாயில் அதிக பங்காற்றும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்படும் மத்திய வரிப் பங்கு தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகிறது. 9-வது நிதி கமிஷன் மூலம் 7.831% வரி பங்கீடு கிடைத்த நிலையில், 15வது நிதி கமிஷன் கீழ் வெறும் 4.079%ஆகக்குறைந்துள்ளது. இதனால் நிதிச்சுமை அதிகரித்து முக்கிய கட்டமைப்பு திட்டங்கள், சமூக நலத்திட்டங்கள் மற்றும் பேரழிவுகளுக்கு எதிரான நிவாரண நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் பெரிய தடையாக உள்ளது. மொத்தமாக, ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு 41% வருவாயை பகிர்ந்து கொடுக்கும் என தெரிவித்தாலும், நடைமுறையில் வழங்கப்படும் தொகை குறைவாகவே இருக்கிறது. இதனால், பொருளாதார ரீதியாக வலுவான மாநிலங்களுக்கே கூட, திட்டமிட்ட வளர்ச்சி நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் திறன் பாதிக்கப்படுகின்றது.

பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு தமிழகத்திற்கு மட்டுமல்ல பாஜகவுக்கு வாக்களித்த உத்தரப்பிரதேசத்திற்கும் சேர்த்தே துரோகம் செய்துள்ளது. அரசியல் இலாபத்திற்காகவே மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறதோ தவிர, கல்வி மேம்பாட்டிற்காக அல்ல என்பதை பாஜக ஆட்சியின் செயல்கள் நிரூபிக்கின்றன. இதன் விளைவாக, 2024 தேர்தலில் உத்தரப்பிரதேச மக்கள், குறிப்பாக அயோத்தியாவில், பாஜகவுக்கு எதிராக வாக்களித்தனர். 2027-ல் அவர்கள் பாஜகவை உறுதியாக விரட்டியடிப்பார்கள்.

உத்தரப்பிரதேசத்தில் கல்வி நிலை மோசம்!

உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பாஜக ஆளும் மாநிலங்களுக்கு பெரிய அளவில் நிதி வழங்கப்பட்டாலும், நிலைமை மோசமடைந்துதான் வருகிறது. கடந்த 2015 முதல் 2025 வரை, உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு மட்டும் 8 லட்சம் கோடிக்கு மேல் கல்விக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கே இன்று கல்வியறிவு விகிதம் வெறும் 67.68% மட்டுமே உள்ளது. உயர்கல்வி சேர்க்கை விகிதம் வெறும் 28.1% தான். இவ்வளவு நிதி வழங்கியும், கல்வித்துறை முன்னேறமில்லை என்றால், அந்த பணம் எங்கே போயிற்று?

மக்களை கல்வியறிவற்றவர்களாக வைத்திருக்கவும், எளிதில் கட்டுப்படுத்தவும் பாஜக அரசு திட்டமிட்டே செயல்படுகிறது. வெறுப்புப் பிரச்சாரங்களையும், அரசியல் கணக்குகளையும் மட்டுமே முன்னிலைப் படுத்தி கல்வியை புறக்கணிக்கிறது.

அதே வேளையில் தமிழ்நாடு 82% கல்வியறிவு விகிதத்துடனும், 51.4% உயர்கல்விசேர்க்கைவிகிதத்துடனும் கல்வி வளர்ச்சியில் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. ஆனால், தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் பாஜகவின் தவறான கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததற்காக தமிழ்நாட்டிற்கு 2,152 கோடி நிதி வழங்க மறுக்கப்பட்டுள்ளது. இதனால் பாஜக அரசின் அரசியல் நோக்கத்திற்குப் பாதகமாக இருந்தால், ஒரு மாநிலத்தின் கல்வி வளர்ச்சி தண்டிக்கப்படும் என்ற உண்மை தெளிவாகிறது!

வெறுப்புப் பிரச்சாரங்கள்!

இதேபோல 2024-25 ஆம் ஆண்டில் உத்தரப்பிரதேசத்திற்கு 50,550 கோடி தேசிய சுகாதார திட்டங்களில் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு வெறும் 3,100 கோடி தான்! அதாவது உத்தரப்பிரதேசத்திற்கு வழங்கிய தொகையின் 1/16 மட்டுமே! ஆனால், இந்த அதிக நிதி உத்தரப்பிரதேசத்தின் சுகாதாரக் கட்டமைப்பு வளர்ச்சிக்கு நல்ல பலன் அளித்ததா? என்றால் இல்லை! உத்தரப்பிரதேசத்தில் 1,000 பிறப்புகளுக்கு 38 குழந்தை உயிரிழப்பு என்ற நிலையில் தமிழ்நாட்டில் வெறும் 10. உத்தரப்பிரதேசத்தில் 1 லட்சம் பிறப்புகளுக்கு 167 தாய் உயிரிழப்பு என்ற நிலையில் தமிழ்நாட்டில் 50-க்கும் குறைவாக! ஆக, ஒதுக்கப்பட்ட அத்தனை நிதியும் எங்கே செல்கிறது? மருத்துவமனைகளுக்கா? மருந்துகளுக்கா? மருத்துவர்களுக்கா? இல்லை! அந்த பணம் அரசியல் பேரணிகள், வெறுப்பு பிரசாரங்கள் மற்றும் ஊழலுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது! எனவே இது ஆட்சி அல்ல, துரோகம்!"

இவ்வாறு எம்.எம்.அப்துல்லா பேசினார்.